# திருநெல்வேலி மாநகராட்சி

## 2021ம் ஆண்டு ஜூலை மாதம் 30ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

1) திருநெல்வேலி மாநகராட்சியின் நான்கு மண்டல பகுதிகளிலும் சுய உதவிக் குழுக்கள் மூலம் 744 துாய்மை பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கு ஆண்டு தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் தொகை ஊதியமாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 2021-22 ஆம் ஆண்டிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந. க. எண் M3/1549/2021 நாள் 15.6.2021ன் படி துாய்மைப் பணியாளர்களுக்கு 2021-22ஆம் ஆண்டிற்கு நாள் ஒன்றுக்கு ரூ.411/- ஊதியமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி ஊதியம் வழங்கவும், 1.4.2021 முதல் அதற்கான நிலுவைத் தொகை வழங்கவும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சியின் நான்கு மண்டல பகுதிகளிலும் சுய உதவிக் குழுக்கள் மூலம் பணிபுரிந்து வரும் 744 துாய்மை பணியாளர்களுக்கு 2021-22 ஆம் ஆண்டிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் M3/1549/2021 நாள் 15.6.2021ன் படி நாள் ஒன்றுக்கு ரூ.411/- ஊதியம் வழங்கவும், 1.4.2021 முதல் அதற்கான நிலுவைத் தொகை வழங்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 35:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க. எண். H2/7560/2017)

---

2) திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பொருட்டும், மாநகர பகுதிகளில் தண்ணீர் தேங்கும் இடங்களில் கொசுப்புழு உற்பத்தியினை தடுக்கும் பொருட்டும், விரைந்து நடவடிக்கை எடுத்து தீவிரமாக செயல்படுத்த ஏதுவாக 55 வார்டுகளுக்கும் தேவைக்கேற்ப நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 2571/2017/J1 நாள்: 28.11.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ஒ.மு.எண் 13433/2018/J1 நாள் 17.09.2019 ல் தெரிவிக்கப்பட்டுள்ள Plan 300 HH-ன்படி மாநகராட்சியில் மொத்தம் உள்ள 155408 வீடுகளுக்கும், மாநகர பகுதிகளில் உள்ள 12500 வணிக வளாகங்களுக்கும் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 50 வீடுகள் வீதம் 6 நாட்களுக்கு 300 வீடுகள் என்ற விகிதத்தில் 560 DBC களப்பணியாளர்கள் மாநகர பகுதிகளில் பணியாற்றி வருகின்றனர். தற்பொழுது மீண்டும் பருவமழை காலம் துவங்க இருப்பதால் ஏற்கெனவே மாமன்ற அனுமதி பெற்று பணிபுரிந்து வரும் 560 டெங்கு தடுப்பு பணியாளர்கள் மற்றும் கொரானா தடுப்பு நடவடிக்கைக்காக பணியமர்த்தப்பட்டுள்ள 23 பணியாளர்கள் ஆக மொத்தம் 583 பணியாளர்களை தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தவும், அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் M3/1549/2021 நாள்: 15.6.2021ன் படி நாள் ஒன்றுக்கு ரூ.388/- ஊதியம் வழங்கவும், 1.4.2021 முதல் அதற்கான நிலுவைத் தொகை வழங்கவும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண் 2571/2017/J1 நாள் 28.11.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ஒ.மு. எண் 13433/2018/J1 நாள் 17.9.2018 ன்படி, திருநெல்வேலி மாநகராட்சியில் பணிபுரியும் 583 DBC பணியாளர்களை தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல் முறை ஆணை ந.க.எண் M3/1549/2021 நாள் 15.06.2021ன்படி நாள்

ஒன்றுக்கு ரூ.388/- ஊதியம் வழங்கவும், 1.4.2021 முதல் அதற்கான நிலுவைத் தொகை வழங்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 36:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

( H4/76/2020)

---

3) திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட மகாராஜநகர் ஜெயேந்திரா பள்ளி பூங்கா அருகில் ஆவின் பார்லர் அமைப்பதற்கு திருநெல்வேலி மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண் 83 நாள் 31.7.2020-ன்படி அனுமதி ஆணை வழங்கப்பட்டது. இந்நிலையில் பொது மேலாளர், திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண். 650/MKg/2020 நாள் 9.4.2021-ல் மகாராஜநகர் ஜெயேந்திரா பள்ளி அருகில் அமைந்துள்ள பூங்காவில் ஆவின் பார்லர் அமைப்பதற்கு போதுமான இடவசதி இல்லாத காரணத்தினால் மேற்கண்ட ஆவின் பார்லரை மகாராஜநகர் 17-வது மெயின்ரோட்டில் உள்ள இரயில்வே கிராசிங் பூங்காவில் மாற்றி அமைப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இளநிலை பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர் (பொ) பாளையங்கோட்டை மண்டலம் அவர்களது 19.5.2021-ம் தேதிய அறிக்கையில் திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 20 மகாராஜநகரில் உள்ள போக்குவரத்து விதிமுறைகள் பூங்காவிற்கு வெளியே மாநகராட்சி சாலையின் ஓரத்தில் 10”X10” என்ற அளவில் ஆவின் பாலகம் அமைக்கலாம் என அறிக்கை செய்துள்ளார். மேலும் ஏற்கனவே மகாராஜநகர் ஜெயேந்திரா பள்ளி அருகில் அமைந்துள்ள பூங்காவில் ஆவின் பார்லர் அமைப்பதற்கு வழங்கப்பட்ட அனுமதியினை ரத்து செய்யவும் அறிக்கை செய்துள்ளார்.

அதன்படி திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 20 மகாராஜநகரில் உள்ள போக்குவரத்து விதிமுறைகள் பூங்காவிற்கு வெளியே மாநகராட்சி சாலையின் ஓரத்தில் 10”X10” என்ற அளவில் ஆவின் பாலகம் அமைக்க கீழ்க்கண்ட நிபந்தனைகுட்பட்டு இடம் ஒதுக்கீடு செய்வது குறித்தும் அதற்கு மாத வாடகையாக ரூ.2000/- என நிர்ணயம் செய்திடவும், ஏற்கனவே மகாராஜநகர் ஜெயேந்திரா பள்ளி அருகில் அமைந்துள்ள பூங்காவின் அருகில் ஆவின் பார்லர் அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்ட அனுமதி ஆணையினை ரத்து செய்திடவும். மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட வார்டு 20 மகாராஜநகரில் உள்ள போக்குவரத்து விதிமுறைகள் பூங்கா அருகில் மாநகராட்சி சாலையின் ஓரத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆவின் பாலகத்திற்கு மாத வாடகையாக குறைந்தபட்ச நிர்ணயத் தொகையாக ரூ.2000/-ம் நிர்ணயம் செய்யப்படுகிறது.

2. மனுதாரர் மேற்படி பூங்காவிற்கு வெளியே மாநகராட்சி சாலை ஓரத்தில் 10”X10” என்ற அளவில் ஆவின் பூத் பொது மக்களின் போக்குவத்துக்கு இடையூறு செய்யும் வகையில் இருத்தல் கூடாது.

3. மனுதாரர் மேற்படி ஆவின் பாலகத்தில் ஆவின் பாலக பொருட்கள் மட்டுமே விற்கப்படவேண்டும் போதை பொருட்களான சிகரெட், பீடி, புகையிலை, பாக்கு ஆகிய இனங்கள் மற்றும் வடை, சாப்பாடு சம்பந்தப்பட்ட பொருட்கள் ஏதும் விற்கப்பட கூடாது.

4. மாநகராட்சி நிபந்தனைகளின்படி (எண் 12) குத்தகை காலத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் சொத்துக்கள் முழுவதையும் அல்லது எந்த பாகமாவது மாநகராட்சிக்கு தேவையானால் குத்தகைதாரர் எந்தவித தடையும் இன்றி எவ்வித

இழப்பு தொகையும் கோராமல் மாநகராட்சியிடம் ஒப்படைத்துவிட வேண்டும் எனவும் இதில் மாநகராட்சியின் தீர்ப்பே முடிவானது.

5. இதற்கென ரூ.20/- பத்திரத்தில் ஒப்பந்தபத்திரம் தயார் செய்து மாநகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

6. கடை வாடகையினை பிரதி மாதம் 5-ம்தேதிக்குள் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திவிட வேண்டும்.

அலுவலக குறிப்பு:

பொருளில் கண்டுள்ளவாறு திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 20 மகாராஜநகரில் உள்ள போக்குவரத்து விதிமுறைகள் பூங்காவிற்கு வெளியே மாநகராட்சி சாலை ஓரத்தில் 10”X10” என்ற அளவில் ஆவின் பாலகம் அமைக்க நிபந்தனைகுட்பட்டு இடம் ஒதுக்கீடு செய்வது குறித்தும் அதற்கு மாத வாடகையாக ரூ.2000 /- என நிர்ணயம் செய்திடவும், ஏற்கனவே மகாராஜநகர் ஜெயேந்திரா பள்ளி அருகில் அமைந்துள்ள பூங்காவின் அருகில் ஆவின் பார்லர் அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்ட அனுமதி ஆணையினை ரத்து செய்வது குறித்தும் மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 37:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ1/1350/2021-பாளை)

---

4) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 30, திருநீலகண்ட நாயனார் தெரு பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள மின்கம்பங்கள் எண் 109, 110 ஆகிய 2 எண்ணம் மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 2 எண்ணம் 20 W LED தெருவிளக்கு பொருத்திடவும், தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) பகிர்மான கழகத்திற்கு செலுத்த வேண்டிய தொகை சேர்த்து மொத்தம் உத்தேச செலவினத் தொகை ரூ.30000/- மட்டும் (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட பொருளில் குறிப்பிட்டுள்ள இடங்களில் ஏற்கனவே அமைந்துள்ள மின்கம்பங்கள் எண் 109, 110 ஆகியவற்றுக்கு தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 2 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திடவும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.30000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்)-க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 38:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ1/3438/2021-மே.பா.)

---

5) திருநெல்வேலி மாநகராட்சியில் அம்ரூத் திட்டத்தின் கீழ், விடுபட்ட பகுதிகளான வார்டு எண்.1 முதல் 7 வரை, வார்டு எண்.38 (பகுதி), வார்டு எண்.39 முதல் 55 வரையுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தினை ரூ.289.01 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றுவதற்கு அரசாணை எண்.111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.10.2017ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அலுவலக ந.க.எண்.18281/2017/DO1 நாள் 14.11.2017ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின்படியும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு ஆசிய மேம்பாட்டு வங்கியில் இருந்து தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் மூலமாக 19.11.2017ல் தடையின்மை சான்று பெறப்பட்டதின்படியும் 5.1.2018ல் மூடி முத்திரையிடப்பட்ட

இருஉறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நிர்வாக காரணங்களால் மேற்படி தேதியில் பெறப்பட இருந்த ஒப்பந்தப்புள்ளிகள் 31.1.2018 வரை பெறப்படும் என கால நீட்டிப்பு செய்யப்பட்டு அவ்வாறே 31.1.2018ல் இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

அவற்றுள் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Larsen & Toubro Construction Limited, Chennai நிறுவனத்தின் இறுதிக்கட்ட விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் துறை மதிப்பீட்டில் இருந்து 12.00 சதவீதம் அதிகமான ஒப்பந்தப்புள்ளியை (தொகை ரூ.291.81 கோடி) மாமன்றத் தீர்மானம் எண்.31 நாள் 4.6.2018ல் ஒப்புக்கொள்ளப்பட்டு மேற்படி நிறுவனத்திற்கு 25.07.2018 அன்று வேலை ஆணை வழங்கப்பட்டு, வேலை ஆணை வழங்கப்பட்ட 36 மாத காலத்திற்குள் மேற்படி திட்டப்பணியை முடிக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது.

தற்போது மேற்படி திட்டப்பணியில் ஜீன் 2021 வரையிலான காலத்திற்கு 98.00 சதவிகிதம் திட்டப்பணி முடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற நிலையில் பல்வேறு காரணங்களினால் 62.00 சதவிகித பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மதிப்பீட்டில் உள்ள இனங்களில் மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட திட்டப்பணி நடைபெறும் பொழுது அளவுகளை கணக்கீடு செய்து அவ்வாறு கூடுதலாக வரும் அளவுகளையும் அவற்றிற்கான தொகையினையும் கணக்கீடு செய்யப்பட்டுள்ள விபரம் கீழ்க்கண்டவாறு :- (இணைப்பு 1ல் கண்டவாறு)

<u>பிப்ரவரி 2021 வரையிலான காலத்திற்கு</u>

- மதிப்பீட்டின்படி உள்ள தொகை :. ரூ.2,90,12,675/-
- பிப்ரவரி 2021 வரை செய்து முடிக்கப்பட்டது : ரூ.7,07,28,442/-
- திட்டப்பணி நடைபெறும் போது மதிப்பீட்டை விட கூடுதலாகும் அளவுக்கான தொகை : ரூ.4,17,15,767/-

(1) மேற்கண்ட கணக்கீட்டின்படி திட்டப்பணி நடைபெறும் போது பிப்ரவரி 2021 வரையிலான மதிப்பீட்டில் உள்ள இனங்களின் அளவுகளை விட கூடுதலாகும் அளவுக்கான தொகை ரூ.4,17,15,767/-ல் மாமன்றக் கூட்டத் தீர்மானம் எண் 130 நாள் 17.09.2020ல் ரூ.83,49,548/-க்கும், மாமன்றக் கூட்டத்தீர்மான எண் 262 நாள் 26.02.2021ல் ரூ.56,93,895/-க்கும் மாமன்ற அனுமதி பெற்றுள்ளதால் மீதம் உள்ள தொகை ரூ. 2,76,72,324/-க்கு மாமன்ற அனுமதிக்கும் (இணைப்பு 1ல் கண்டவாறு)

(2) மேற்படி திட்டப்பணியில் மூல மதிப்பீட்டில் வழி வகை செய்யப்படாத இனங்கள் பணித்தளத்தில் அவசியமாக மேற்கொள்ளப்பட்டதாலும் இத்திட்டப்பணி நடைபெறும் பொழுது பிப்ரவரி 2021 வரையிலான அளவுகளுக்கான தொகை ரூ.15,69,15,023/-ல் மாமன்றக் கூட்டத்தீர்மானம் எண் 130 நாள் 17.09.2020ல் ரூ.5,70,73,226/-க்கும் மாமன்றத் கூட்டத்தீர்மான எண் 262 நாள் 26.02.2021 ல் ரூ.5,37,91,145/- க்கும் மாமன்ற அனுமதி பெற்றுள்ளதால் மீதம் உள்ள தொகை ரூ.4,60,50,652/-க்கு மாமன்ற அனுமதிக்கும் (இணைப்பு -2ல் கண்டவாறு).

(3) மேற்படி மூல மதிப்பீட்டில் வழி வகை செய்யப்படாத இனங்களுக்கு தமிழ்நாடு பொதுப்பணித்துறையால் வெளியிடப்பட்டுள்ள விலை விபர அட்டவணையின்படியும் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வெளியிடப்பட்டுள்ள விலை விபர அட்டவணையின்படி விலை விகிதத்தை கணக்கீடு செய்து தலைமைப் பொறியாளர் (FAC) நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் ந.க.எண் 30578/2019/DO2 நாள் 23.06.2021 ஒப்புதல் பெறப்பட்டுள்ள விபரம் மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்ட விபரப்படி, அம்ரூத் திட்டத்தின் கீழ், விடுபட்ட பகுதிகளான வார்டு எண்.1 முதல் 7 வரை, வார்டு எண் 38 (பகுதி), வார்டு எண் 39 முதல் 55 வரையுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி திட்டப்பணியில், மதிப்பீட்டில் உள்ள இனங்களில் மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட திட்டப்பணி நடைபெறும் பொழுது பிப்ரவரி 2021 வரையிலான அளவுகளை கணக்கீடு செய்து அவ்வாறு கூடுதலாக வரும் அளவுகளையும் அவற்றிற்கான தொகையினையும் கணக்கீடு செய்து

(1) மதிப்பீட்டில் உள்ள இனங்களின் அளவுகளை விட கூடுதலாகும் அளவுக்கான தொகை ரூ.4,17,15,767/-ல் மாமன்றக் கூட்டத் தீர்மானம் எண் 130 நாள் 17.09.2020ல் ரூ.83,49,548/-க்கும், மாமன்றக் கூட்டத் தீர்மான எண் 262 நாள் 26.02.2021ல் ரூ.56,93,895/- க்கும் மாமன்ற அனுமதி பெற்றுள்ளதால் மீதம் உள்ள தொகை ரூ.2,76,72,324/-க்கு மாமன்ற அனுமதிக்கும் (இணைப்பு 1ல் கண்டவாறு)

(2) மேற்படி திட்டப்பணியில் மூல மதிப்பீட்டில் வழி வகை செய்யப்படாத இனங்கள் பணித்தளத்தில் அவசியமாக மேற்கொள்ளப்பட்டதாலும் இத்திட்டப்பணி நடைபெறும் பொழுது பிப்ரவரி 2021 வரையிலான அளவுகளுக்கான தொகை ரூ.15,69,15,023/-ல் மாமன்றக் கூட்டத்தீர்மானம் எண் 130 நாள் 17.09.2020ல் ரூ.5,70,73,226/-க்கும் மாமன்றத் கூட்டத் தீர்மான எண் 262 நாள் 26.02.2021 ல் ரூ.5,37,91,145/- க்கும் மாமன்ற அனுமதி பெற்றுள்ளதால் மீதம் உள்ள தொகை ரூ.4,60,50,652/-க்கு மாமன்ற அனுமதிக்கும் (இணைப்பு -2ல் கண்டவாறு).

(3) மேற்படி மூலமதிப்பீட்டில் வழி வகை செய்யப்படாத இனங்களுக்கு தமிழ்நாடு பொதுப் பணித்துறையால் வெளியிடப்பட்டுள்ள விலை விபர அட்டவணையின்படியும் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வெளியிடப்பட்டுள்ள விலை விபர அட்டவணையின்படி விலை விகிதத்தை கணக்கீடு செய்து தலைமைப் பொறியாளர் (FAC) நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் ந.க.எண் 30578/2019/DO2 நாள் 23.06.2021ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 39:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ3/1473/2015)

---

6) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.பி3/4235/2018 நாள் 07.02.2018-ன் படி, இம்மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் - ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2017-18-ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணியினை மேம்படுத்தும் வகையில், மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குப்பைகளை சேகரம் செய்து ஒரே இடத்தில் கொண்டு சேர்ப்பதற்கு பதிலாக, அந்தந்த பகுதிகளில் தினந்தோறும் சேகரிக்கப்படும் குப்பைகளை அந்தந்த பகுதியில் உள்ள பூங்கா திறவிடங்களில் ஒன்று சேர்த்து, உரமாக்கும் பணியினை மேற்கொள்தற்கு நுண் உரமாக்கும் மையங்கள் (Micro Compost Centres) அமைக்கப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகின்றது.

மேற்படி நுண் உரமாக்கும் மையங்களில் (1) குப்பைகளை அரைத்தல் (2) நுண்ணுயிர் திரவம் தெளித்தல் (3) இயந்திரப் பணிகள் மேற்கொள்ளுதல் (4) தொட்டியில் உள்ள குப்பைகளை தினசரி கிளறி விடுதல் (5) உரம் தயார் செய்தல், உரம் காய வைத்தல், சலித்தல் மற்றும் பேக்கிங் செய்தல் போன்ற பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றது. மேலும், மாநகராட்சிப் பகுதிகளில் கழிவுநீர் ஓடை துப்புரவு பணி, பொதுக்கழிப்பிடங்கள் சுத்தம் செய்தல், குப்பை அகற்றும் வாகனங்களில் பணி செய்தல், மண்டல அலுவலகங்கள், மாநகராட்சி கட்டிடங்கள் போன்றவைகளில் பல்வேறு சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இப்பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான துப்புரவு பணியாளர்கள் இம்மாநகராட்சியில் இல்லை. எனவே, பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் பொது சுகாதாரப் பணிகள் பாதிப்பாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

மாநகர மக்களின் பொது சுகாதார நலன் கருதியும், தற்போது பொதுமக்களிடம் திடக்கழிவு மேலாண்மை உபயோகிப்பாளர் கட்டணத்தினை சொத்துவரியுடன் சேர்த்து வசூல் செய்யப்பட்டு வருவதினை கருத்தில் கொண்டும் துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் ந.க.8100/J3/2019 நாள் 07.06.2019 தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படி முதற்கட்டமாக 233 பணியாளர்களை வெளி கொணர்வு (Out Source) மூலம் அமர்த்திக் கொள்வதற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி 2021-2022-ம் வருடத்திற்குரிய துப்புரவு பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் அதற்குண்டான ESI, EPF மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்ட இனங்களையும் உள்ளடக்கி அதன் அடிப்படையில் 233 எண்ணம் துப்புரவு பணியாளர்களை ஒரு வருட காலத்திற்கு அமர்த்திக் கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.45 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கிடவும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு, இம்மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் - ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2017-18ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணியினை மேம்படுத்தும் வகையில், மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் குப்பைகளை சேகரம் செய்து ஒரே இடத்தில் கொண்டு சேர்ப்பதற்கு பதிலாக, அந்தந்த பகுதிகளில் தினந்தோறும் சேகரிக்கப்படும் குப்பைகளை அந்தந்த பகுதியில் உள்ள பூங்கா திறவிடங்களில் ஒன்று சேர்த்து, உரமாக்கும் பணியினை மேற்கொள்தற்கு நுண் உரமாக்கும் மையங்கள் (Micro Compost Centres) அமைக்கப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகின்றது. மேற்படி நுண் உரமாக்கும் மையங்களில் (1) குப்பைகளை அரைத்தல் (2) நுண்ணுயிர் திரவம் தெளித்தல் (3) இயந்திரப் பணிகள் மேற்கொள்ளுதல் (4) தொட்டியில் உள்ள குப்பைகளை தினசரி கிளறி விடுதல் (5) உரம் தயார் செய்தல், உரம் காய வைத்தல், சலித்தல் மற்றும் பேக்கிங் செய்தல் போன்ற பல்வேறு பணிகள் மற்றும் நான்கு மண்டலப் பகுதிகளிலும் கழிவுநீர் ஓடை துப்புரவு பணி, பொதுக்கழிப்பிடங்கள் சுத்தம் செய்தல், குப்பை அகற்றும் வாகனங்களில் பணி செய்தல், மண்டல அலுவலகங்கள், மாநகராட்சி கட்டிடங்கள் போன்றவைகளில் பல்வேறு சுகாதாரப் பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான துப்புரவு பணியாளர்கள் இம்மாநகராட்சியில் இல்லாததால், மாநகர மக்களின் பொது சுகாதார நலன் கருதியும், தற்போது பொதுமக்களிடம் திடக்கழிவு மேலாண்மை உபயோகிப்பாளர் கட்டணத்தினை சொத்துவரியுடன் சேர்த்து வசூல் செய்யப்பட்டு வருவதினை கருத்தில் கொண்டும் துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் ந.க. 8100/J3/2019, நாள் 07.06.2019 தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படி 233 பணியாளர்களை வெளி கொணர்வு (Out Source) மூலம் அமர்த்திக் கொள்வதற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி 2021-2022-ம் வருடத்திற்குரிய துப்புரவு பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் அதற்குண்டான ESI, EPF மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்ட இனங்களையும் உள்ளடக்கி அதன் அடிப்படையில் 233 எண்ணம் துப்புரவு பணியாளர்களை ஒரு வருட காலத்திற்கு அமர்த்திக் கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.45 கோடிக்கு மாமன்றம் நிர்வாக அனுமதி வழங்கிடவும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 40:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(எச்2/1654/2020)

---

7) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 28, பாண்டித்துரை 1வது தெரு பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள 3 எண்ணம் மின்கம்பங்களின்

தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 3 எண்ணம் 20 W LED தெருவிளக்கு பொருத்திடவும், தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) பகிர்மான கழகத்திற்கு செலுத்த வேண்டிய செலவுத் தொகையும் சேர்த்து உத்தேச செலவினத் தொகை ரூ.50,000/-க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட பொருளில் குறிப்பிட்டுள்ள இடங்களில் ஏற்கனவே அமைந்துள்ள 3 எண்ணம் மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 3 எண்ணம் 20 W LED தெருவிளக்கு பொருத்திடவும், தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) பகிர்மான கழகத்திற்கு செலுத்த வேண்டிய செலவுத் தொகையும் சேர்த்து உத்தேச செலவினத் தொகை ரூ.50,000/-க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 41:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ1/3571/2021)

---

8) திருநெல்வேலி மாநகராட்சியில் சமுதாய சூழல் நிதியின் (CER Fund) கீழ் பாதாள சாக்கடை ஆள் இறங்கு குழிகளை சுத்தம் செய்வதற்கான தானியங்கி இயந்திரம் (Robotic Manhole Cleaning Machine) 1 எண்ணம் கொள்முதல் செயதல் பணிக்கு மாமன்ற தீர்மான நாள் 07.07.2021ல் ரூ.40.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 7/2021-22-ன் படி மாவட்ட அளவில் மதுரை மணி தமிழ் நாளிதழில் 08.07.2021-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதின்படி மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 26.07.2021-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் (1) M/s.Irov Technologies Pvt Ltd, Kochi, Kerala மற்றும் (2) M/s.Genrobotic Innovations Pvt Ltd, Kazhakootam, Kerala ஆகிய இரண்டு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 27.07.2021 -ல் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் M/s.Irov Technologies Pvt Ltd, Kochi, Kerala ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 28.07.2021ன்படி M/s.Irov Technologies Pvt Ltd, Kochi, Kerala ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒப்பந்தப்புள்ளியான M/s.Genrobotic Innovations Pvt Ltd, Kazhakootam, Kerala ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனங்களின் விலை அட்டவணைகள் மட்டும் 29.07.2021ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | M/s.Genrobotic Innovations Pvt Ltd, Kazhakootam, Kerala நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் சமுதாய சூழல் நிதியின் (CER Fund) கீழ் பாதாள சாக்கடை ஆள் இறங்கு குழிகளை சுத்தம் செய்வதற்கான தானியங்கி இயந்திரம் (Robotic Manhole Cleaning Machine) 1 எண்ணம் கொள்முதல் செயதல் | ரூ.39,52,568/- | ரூ.39,52,568/- |
| | | | 0.00% |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு M/s.Genrobotic Innovations Pvt Ltd, Kazhakootam, Kerala நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.39,52,568/- ஆனது மதிப்பீட்டு விலை வகிதத்தில் உள்ளதால், 29.07.2021-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Genrobotic Innovations Pvt Ltd, Kazhakootam, Kerala ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி M/s.Genrobotic Innovations Pvt Ltd, Kazhakootam, Kerala நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் சமுதாய சூழல் நிதியின் (CER Fund) கீழ் பாதாள சாக்கடை ஆள் இறங்கு குழிகளை சுத்தம் செய்வதற்கான தானியங்கி இயந்திரம் (Robotic Manhole Cleaning Machine) 1 எண்ணம் கொள்முதல் செயதல் பணிக்கு, 29.07.2021-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Genrobotic Innovations Pvt Ltd, Kazhakootam, Kerala ஒப்பந்த நிறுவனத்தின் (ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.39,52,568/-) ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 42:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.எண்.7/2021-22)

---

9) திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ் 28 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 எண்ணம் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர்களை வெளிக்கொணர்வு மூலம் அமர்த்திக் கொள்ளுதல் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண.26458/2016/P1 நாள் 06.07.2021ல் ரூ.33.56 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டதின்படி மேற்படி பணிக்கு மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 6/2021-22-ன் படி மாநில அளவில் 11.07.2021-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதின்படி மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 15.07.2021-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில மூடிமுத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் (1) M/s.Om Sai Ventures, Bangalore, (2) M/s.Falcon (c) Security Services Ltd, Chennai (3) M/s.AMK Manpower Services, Nagercoil (4) M/s.Puliyoorsalai Labour Contract Co – operative Society Ltd, Kannyakumari மற்றும் (5) M/s.Jayram Ventures, Chennai ஆகிய ஐந்து ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 15.07.2021-ல் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் (1) M/s.Om Sai Ventures, Bangalore, (2) M/s.Falcon (c) Security Services Ltd, Chennai மற்றும் (3) M/s.Puliyoorsalai Labour Contract Co – operative Society Ltd, Kannyakumari ஆகிய ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 16.07.2021ன்படி (1) M/s.Om Sai Ventures, Bangalore, (2) M/s.Falcon (c) Security Services Ltd, Chennai மற்றும் (3) M/s.Puliyoorsalai Labour Contract Co – operative Society Ltd, Kannyakumari ஆகிய ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒப்பந்தப்புள்ளிகளான (1) M/s.AMK Manpower Services, Nagercoil மற்றும் (2) M/s.Jayram Ventures, Chennai ஆகிய ஒப்பந்த நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனங்களின் விலை அட்டவணைகள் மட்டும் 28.07.2021ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | M/s.Jayram Ventures, Chennai நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு | M/s.AMK Manpower Services, Nagercoil நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ் 28 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 எண்ணம் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர்களை வெளிக்கொணர்வு மூலம் அமர்த்திக் கொள்ளுதல் | ரூ.33,52,134/- | ரூ.32,89,350/- | ரூ.32,92,296/- |
| | | | 1.87% மதிப்பீட்டை விட குறைவு | 1.79% மதிப்பீட்டை விட குறைவு |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Jayram Ventures, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.32,89,350/- ஆனது மதிப்பீட்டை விட 1.87% குறைவாக உள்ளதால், 29.07.2021-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Jayram Ventures, Chennai ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.32,89,350/- மதிப்பீட்டை விட 1.87% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி M/s.Jayram Ventures, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ் 28 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 எண்ணம் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர்களை வெளிக்கொணர்வு மூலம் அமர்த்திக் கொள்வதற்கு, 29.07.2021-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Jayram Ventures, Chennai ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.32,89,350/- மதிப்பீட்டை விட 1.87% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 43:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.எண்.6/2021-22)

---

10) திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் 250வாட்ஸ், 150 வாட்ஸ், 70வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் T5 விளக்குகளை கழற்றி அதற்கு பதிலாக புதிதாக 90வாட்ஸ், 60வாட்ஸ் மற்றும் 40வாட்ஸ் LED விளக்குகளாக மாற்றம் செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கழற்றப்பட்ட விளக்குகள் மைய அலுவலக கிட்டங்கியில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அலுவலக இருப்பில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள சோடியம் தெருவிளக்குகள் அதிக வாட்ஸ் மின்திறன் கொண்டதாக இருப்பதால் மீண்டும் பயன்படுத்த

முடியாத நிலையில் உள்ள பழைய தெருவிளக்குகளை 25.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு 25.05.2021 அன்று ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன்படி, பழைய மின்விளக்குகளை விற்பனை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு தினமலர் நாளிதழில் 10.06.2021 அன்று பிரசுரம் செய்யப்பட்டு 25.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டத்தில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் கலந்து கொண்டனர். அதன் விபரம் பின்வருமாறு :-

| Item No | Description of Work | Rate Material | Thiru.M. Subra manian | Thiru. Pandiyan | M/s. LKJ Traders | M/s. Arul Traders |
|---|---|---|---|---|---|---|
| 1 | Dispose the 250 Watts Sodium Vapour Lamp Fitting Set including labour charges etc., (420 Nos) | 365.00 | 395.00 | 310.00 | 421.00 | 550.00 |
| 2 | Dispose the 150 Watts Sodium Vapour Lamp Fitting Set including labour charges etc., (748Nos) | 250.00 | 295.00 | 240.00 | 331.00 | 275.00 |
| 3 | Dispose the 70 Watts Sodium Vapour Lamp Fitting Set including labour charges etc., (144Nos) | 165.00 | 230.00 | 180.00 | 201.00 | 150.00 |
| 4 | Dispose the 4X24W T5 Fitting Set including labour charges etc.,(185Nos) | 125.00 | 235.00 | 165.00 | 75.00 | 125.00 |
| **Total Contract Value** | | 387185.00 | 463155.00 | 366165.00 | 467227.00 | 481425.00 |
| **Tender Percentage** | | | 19.62 | -5.43 | 20.67 | 24.34 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட 4 ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் முன்வைப்புத் தொகை ரூ.3880/- வீதம் செலுத்தியுள்ளனர். மேற்படி பெறப்பட்ட 4 ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. Arul Traders, திருநெல்வேலி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பினை விட கூடுதலாகவும், துறையின் ஒப்பந்த மதிப்பினை விட 24.34% கூடுதலாகவும் (ஒப்பந்த மதிப்பு ரூ.481425/-) உள்ளது. மேற்படி பழைய தெருவிளக்குகளை விற்பனை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டத்தில், மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 24.34% கூடுதலாக (ஒப்பந்த மதிப்பு ரூ.481425/-) இருப்பதாலும் மேற்படி M/s. Arul Traders, திருநெல்வேலி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்வது குறித்து மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்ட விவரப்படி, சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் 250வாட்ஸ், 150 வாட்ஸ், 70வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் T5 விளக்குகளை கழற்றி அதற்கு பதிலாக புதிதாக 90வாட்ஸ், 60வாட்ஸ் மற்றும் 40வாட்ஸ் LED விளக்குகளாக மாற்றம் செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கழற்றப்பட்ட தெருவிளக்குகள் அதிக வாட்ஸ் மின்திறன் கொண்டதாக இருப்பதால் மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள மேற்படி பழைய தெருவிளக்குகளை விற்பனை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட 4 ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் முன்வைப்புத் தொகை ரூ.3880/- வீதம் செலுத்தியுள்ளனர். மேற்படி பெறப்பட்ட 4 ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. Arul Traders, திருநெல்வேலி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பினை விட கூடுதலாகவும், துறையின்

ஒப்பந்த மதிப்பினை விட 24.34% கூடுதலாகவும் (ஒப்பந்த மதிப்பு ரூ.481425/-) உள்ளது. மேற்படி பழைய தெருவிளக்குகளை விற்பனை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 24.34% கூடுதலாக (ஒப்பந்த மதிப்பு ரூ.481425/-) இருப்பதாலும் மேற்படி M/s. Arul Traders, திருநெல்வேலி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 44:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

---